DEPOSITION OF WITNESS

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT, NAMAKKAL.

**CASE NO.C.C.No.147/2024**

**PW–1**

| | | |
|---|---|---|
| Name | : | அனுசியா |
| Father's Name | : | க/பெ ஆனந்தன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the

Date:30.04.2025

**முதல் விசாரணை**

1) நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் 2/104, ஆரியூர் அஞ்சல், மோகனூர் வட்டம், நாமக்கல் மாவட்டம் என்ற விலாசத்தில் குடியிருந்து வருகிறேன். எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். மேற்படி நிரூபண வாக்குமூலத்தை எனது தரப்பு சாட்சியமாக ஏற்க வேண்டுகிறேன்.

2) கடந்த 02.11.2023 ஆம் தேதி நகை கடன் ரசீதின் அசல் **ம.சா.ஆ.1.** கடந்த 09.11.2023 ஆம் தேதியிட்ட காசோலை எண்.589740 அசல் **ம.சா.ஆ.2,** கடந்த 09.11.2023 ஆம் தேதியிட்ட காசோலை எண்.589742 அசல் **ம.சா.ஆ.3,** கடந்த 20.11.2023 ஆம் தேதி மேற்படி காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி மெமோ அசல் **ம.சா.ஆ.4,** கடந்த 20.11.2023 ஆம் தேதி காசோலை திருப்பப்பட்டதற்கான வங்கி மெமோ அசல் **ம.சா.ஆ.5,** கடந்த 18.12.2023 ஆம் தேதி புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய பதிவு அறிவிப்பு அலுவலக நகல் **ம.சா.ஆ.6,** கடந்த 20.12.2023 ஆம் தேதி மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டமைக்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் **ம.சா.ஆ.7,** எதிரிக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை அசல் **ம.சா.ஆ.8,** கடந்த 06.01.2024 ஆம் தேதி எதிரிக்கு அனுப்பப்பட்ட ரீஜாயின்டர் அறிவிப்பின் அலுவலக நகல் **ம.சா.ஆ.9,** அதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **ம.சா.ஆ.10** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன். எதிரிக்கு தக்க தண்டனையும், எனக்கு இழப்பீடும் வழங்க பிரார்த்திக்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.